# பெருங்கதை வழி மனித சமுதாயமும் யானையும்

**பா.நளினிப்ரியா**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர்
உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** 1

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

## முன்னுரை

மனித சமுதாயத்திற்கும் விலங்குகளுக்கும் ஆதிகாலந்தொட்டே தொடர்பு இருந்துகொண்டே வந்திருக்கிறது. அனைத்துச் சமுதாய மக்களும் ஒவ்வொருவகையில் பறவைகளோடும், விலங்குகளோடும் தொடர்பு வைத்திருக்கின்றனர். மனிதனின் வாழ்வோடு விலங்குகளின் பிணைப்பு இன்றியமையாததாகி விடுகின்றது. இப்பிணைப்பே காலப்போக்கில் ஒவ்வொரு சமூகப் பிரிவினருக்கும் குலக்குறிச் சின்னமாக விலங்குகள் அமைந்திருக்கக்கூடும். மனிதன் விலங்குகளின் மேல் கொண்டுள்ள பற்றும் அவற்றை நேசிக்கும் முறையும் கொண்டுதான் விலங்குகளின் உணர்வில் மாற்றம் ஏற்பட்டுத் தன்னை நேசிக்கும் மனிதரிடம் காட்டும் நன்றி உணர்வும், மதிப்பும் உயர்கிறது. இதனைக் கொங்குவேளிர் இயற்றிய பெருங்கதையின் வழி அறியமுடிகிறது.

## பெருங்கதையில் இடம்பெறும் யானை

பெருங்கதையில் உதயணனுக்கும் பிரச்சோதனனுக்கும் இடையில் சண்டை ஏற்படுவதும், பின் அச்சண்டை நட்பில் முடிவதற்கும் ‘நளகிரி’ என்னும் யானையே காரணமாக அமைகிறது. பிரச்சோதன மன்னனால் சிறைபிடிக்கப்பட்ட உதயணன் விடுபடுவது யானையால்தான். உதயணன் சிறையிலிருந்து விடுபட யூகி என்பவன் ‘நளகிரி’ என்னும் பட்டத்து யானையை வெறியூட்டுகிறான். அவ்யானையை அடக்கி சிறையிலிருந்து விடுபட உதயணனுக்கு ஒரு வாய்ப்பினை நல்குகிறான். இதன்படியே பட்டத்துயானையை அடக்க ஆணையிடுகிறான் பிரச்சோதன மன்னன். அவ்வாறே உதயணனும் நளகிரி இருக்கும் இடத்தை அடைந்து பிரமசுந்தரமுனிவரிடம் கற்ற மந்திரத்தை ஓதி யானையை அடக்கினான். நளகிரி என்ற யானையால் உதயணனுக்கும் வாசவதத்தைக்கும் இடையில் காதல் ஏற்பட்டுத் திருமணம் நடக்கிறது. இதனை,

**மழகளிற்றுளெருத்தின் மைந்துகொண்டுஇருந்த**
**மன்னகுமரன் நன்னெதிர் நோக்கி**
**ஒழிகுபுசேர்ந்தாங்குஉக்கதென் நெஞ்சென (பெருங்.1:6:130-132)**

என்னும் பாடலடிகளின் மூலம் அறியலாம்.

உதயணன் நளகிரியை அடக்கியதால் மக்கள் துன்பம் தீர்ந்து அமைதியடைந்தனர். பெருங்கதை யானையை அடக்குதல், பழக்குதல் போன்றவற்றை விரிவாக எடுத்துரைக்கின்றது.

**வேதமுதல்வன் விளம்பிய நூல் வழி**
**மாதங்கம் என்றுமதித்திலிற் பெற்ற**
**பெயரதுமற்றதன் இயல்பறிந்தோம்பி (பெருங்.2:9:82-84)**

பிரச்சோதன மன்னனின் அரண்மனையைவிட்டு மதம்பிடித்து ஓடும் நளகிரி யானையை அடக்குகின்ற அறிவுத்திறனையும், தந்திரங்களைக் கையாளும்திறனையும் உதயணன் பெற்றிருந்ததைப் பெருங்கதை எடுத்துக்காட்டுகிறது.

மன்னராட்சி முறையில் யானை இடம்பெறும் விதமும், போர்ப்படையில் யானைகள் அணிவகுத்துச் செல்லும் காட்சியும், உதயணனும், வாசவதத்தையும் உஞ்ஞை நகரத்தைவிட்டு தப்பிச் செல்லும் போது 'பத்திராபதி' என்னும் யானைசெய்யும் உதவியும் எவ்வாறு அமைகின்றன என்று பெருங்கதை காட்டுகிறது.

**பத்திராபதி**

உதயணன் மதம்பிடித்த நளகிரியை அடக்கியதால் பிரச்சோதன மன்னன் அவனுக்கு 'பத்திராபதி' என்னும் பெண்யானையைப் பரிசாகக் கொடுக்கிறான்.

**உத்தராபதத்தும் ஒப்புமை இல்லா**
**பத்திராபதியைபண் அமைத்து இயற்றி (பெருங்.1:43:19-20)**

என்ற பாடலடிகளில் பத்திராபதியைச் சிறப்பித்துக் காட்டுகிறார் கொங்குவேளிர்.

உதயணன் வாசவதத்தையை உடன்கொண்டு செல்ல பத்திராபதியே துணைசெய்கின்றது. ஆனால் பிரச்சோதனன் பத்திராபதியை உதயணனுக்கு கொடுக்கும்போது அந்த யானை அவனைக் கொன்றுவிடும் என்று எண்ணியே அதைக் கொடுக்கிறான். அதற்கு நேர்மாறாக உதயணன் பத்திராபதியைத் தன் வசப்படுத்திவிடுகிறான்.

பிரச்சோதனன் கொடுத்த யானையாக இருந்தாலும் அதனை மிகவும் அன்புடன் நடத்தினான் உதயணன். நெடுந்தூரம் பயணம் செய்த அவ்யானை 'காலகூடம்' என்னும் சுடுநோயால் பாதிக்கப்பட்டு வீழ்ந்து இறந்து விட்டது. உதயணன் அந்தயானைக்கு நீர்க்கடனாற்றி அதை வலம்வந்து வணங்கி தொழுகிறான். தனக்கு உதவிய பத்திராபதிக்கு நன்றியாற்ற யானை இறந்த இடத்திலும் தன்னுடைய நாட்டிலும் கோயில் அமைத்து வழிபாடு நடக்க ஏற்பாடு செய்கிறான். யானையின் எலும்புகளையும், தோல்களையும் கொண்டு வந்து, யானைக்கு வடிவம் அமைத்து வண்ணம் பூசி, அன்னதானம், வழங்கி வழிபடுகிறான்.

**அசைவு இலாளர்க்குஅறிய கூறி**
**என்பும் தோலும் உள்ளவைஎல்லாம்**
**நன்கனம் நாடிகொண்டனிர் வம்-மின் என்று (பெருங்.4:3:4-6)**
**கோடுஉயர் வரைப்பின் ஓர் மாடம் எடுப்பித்து**
**ஈடு அமைபடிவம் இரும் பிடிஅளவா**
**ஏற்பஎடுப்பித்துஎல்லியும் காலையும்**
**பாற்படல் பரப்பிபணிந்து கை கூப்பி**
**வழிபாடுஆற்றி வழி செல்வோர்கட்கு**
**அழிவுநன்குஅகலஅரும் பதம் ஊட்டா**
**தலைநீர் பெரும் தளிநலன் அணிகொளீஇ**
**எனைவராயினும் இனைவோர்க்குஎல்லாம்**
**முனை வெம் துப்பினமுன் அவன் ஈக என**
**விருத்திகொடுத்துதிருதகுசெய் தொழில் (பெருங்.4:3:15-24)**

பெருங்கதையில் நளகிரி, பத்திராபதி, மந்தரம் என்ற மூன்று யானைகள் இடம்பெறுகின்றன.

மக்கள் விலங்குகளின் மேல் வைத்திருந்த அன்பும் கருணையும் பெருங்கதை வழி அறியமுடிகின்றது. விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் உள்ள உறவை பெருங்கதைத் சிறப்பாக எடுத்ததுரைக்கின்றது.

'கடிக்கம்பலை' என்னும் பகுதியில் போர் யானைகளின் சிறப்புகளை 'இலாவணகாண்டம்' எடுத்தியம்புகிறது.

**மூத்தோர் பெண்டிர் நீத்தோர் மகாஅரென**
**நாற்பாலோரையும் நூற்பாற்செய் தொழில்**
**பாகர் வேண்டினும் பையுள் செய்யா**
**வேகஉள்ளத்துவேழந்தெரிந்து (பெருங்.2:2:192-195)**

என்ற பாடலடிகள் மூலம் யானைகளின் இயல்புகளை அறியமுடிகின்றது.

**முடிவுரை**

நளகிரி, பத்திராபதி மற்றும் போர் யானைகளின் இயல்புகள் செயல்களின் மூலம் மனித சமுதாயத்திற்கும் விலங்குகளுக்கும் இடையே உள்ள தொடர்பை விளக்கியுரைக்கின்றது பெருங்கதை.

**துணை நூல்**

பெருங்கதை மூலமும் உரையும்